வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி : 19.05.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, நார்வே தலைநகர் ஓஸ்லோவில், 3ஆவது இந்தோ – நார்டிக் உச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ளார்.

வர்த்தகம் புரிவதை எளிதாக்கி முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்த தொழில்துறையினர், அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என, மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியள்ளார்.

அரக்கோணம் – செங்கல்பட்டு ரயில் பாதையை, இரட்டை பாதையாக மாற்றும் திட்டத்திற்கு, ரயில்வே துறை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி வெற்றி பெற்ற 2 தொகுதிகளில் ஒன்றான தட்டாஞ்சாவடி தொகுதியில் இருந்து, அவர் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, அத்தொகுதி காலியாகி உள்ளது.

**மோடி நார்வே**

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, நார்வே தலைநகர் ஓஸ்லோவில், 3ஆவது இந்தோ – நார்டிக் உச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ளார். வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு, புதுப்பிக்க வல்ல எரிசக்தி போன்ற துறைகளில், நார்டிக் நாடுகள் உடனான தந்திரோபாயக் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் இந்த உச்சி மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன், நார்வே பிரதமர் திரு. ஜோனஸ் ஸ்டோர், டென்மார்க் பிரதமர் திருமதி. Mette Frederiksen, ஃபின்லாந்து பிரதமர் திரு. Petteri Orpo, ஸ்வீடன் பிரதமர் திரு. Ulf Kristersson ஆகியோரும் உச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். உச்சி மாநாட்டிற்கு முன்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஃபின்லாந்து பிரதமர் உள்ளிட்ட நார்டிக் தலைவர்களை, இருதரப்பு ரீதியிலும் சந்தித்தார்.

### *மோடி இத்தாலி*

பிரதமர் திரு. நரேந்திர மோடி 5 நாடுகளுக்கான தமது 6 நாள் பயணத்தின் இறுதிக் கட்டமாக இன்று நார்வேயில் இருந்து இத்தாலி செல்கிறார். இத்தாலி பிரதமர் திருமதி ஜார்ஜியா மெலோனி அழைப்பின் பேரில் இப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது. இன்றும் - நாளையும், பிரதமர் திரு. நரேந்திர மோடி இத்தாலியில் தங்கி இருக்கையில், இத்தாலிய பிரதமருடன் பிரநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்துகிறார். வர்த்தகம், முதலீடுகள், கடல்சார் பாதுகாப்பு, மற்றும் வலுவான போக்குவரத்து தொடர்புகளுக்கு இப்பயணத்தின் போது முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இத்தாலி பயணம் குறித்து, அங்குள்ள இந்திய சமூகத்தினர் மிகுந்த உற்சாகம் அடைந்து இருப்பதாகவும், பிரதமரை வரவேற்க இத்தாலியின் பல்வேறு பகுதிகளில் இருந்து, ரோம் நகரில் கூடி இருப்பதாகவும், செய்திகள் வெளியாகி உள்ளன.

### *ராஜ்நாத்*

வியட்நாம் சென்றுள்ள பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று, அந்நாட்டு அதிபர் திரு. தோ லாம்-ஐ சந்தித்து, இருநாடுகளுக்கும் இடையிலான, பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார். பின்னர், வியட்நாம் பாதுகாப்பு அமைச்சர் திரு. Phan Van Giang-உடன் இணைந்து, வியட்நாமின் விமானப்படை அதிகாரிகள் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள மொழி ஆய்வகத்தை திறந்து வைத்தார். முன்னதாக, வியட்நாமின் தேசத் தந்தையான அதிபர் Ho Chi Minh பிறந்த நாளை ஒட்டி, அன்னாரின் நினைவிடத்தில், திரு. ராஜ்நாத் சிங் அஞ்சலி செலுத்தினார்.

### *கோயல் சீர்திருத்தம் -1*

வர்த்தகம் புரிவதை எளிதாக்கி போட்டித் திறனை அதிகரிப்பதன் மூலம், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் பயணத்தை துரிதமாக்குவதில், தொழில்துறையினர் அரசுடன், இன்னும் ஆழமாக ஒத்துழைக்க வேண்டும் என, மத்திய தொழில் – வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியள்ளார். இன்று புதுடெல்லியில் வர்த்தக சீர்திருத்தம் பற்றிய உச்சிமாநாட்டில் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்…

***கோயல் சீர்திருத்தம் - 2***

உலக அளவில் தற்போது நிலவும், நிச்சயமற்ற புவி – அரசியல் சூழலை, இந்தியாவில் வர்த்தக நடைமுறைகள் மற்றும் பொருள் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாகவே எடுத்துக் கொள்ள வேண்டும் என அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறினார். இந்தியாவில், டேட்டா மையங்கள் மற்றும் கிளவுடு சேவைகளுக்கு ஏற்ற முதலீட்டுச் சூழல் ஒன்றை அரசு உருவாக்கி வருவதாகவும், திறமையான மனித வளம், குறைந்த டேட்டா கட்டணம் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில், பன்னாட்டு நிறுவனங்கள் தற்போது நம்பகமான கூட்டாளி நாடாகவே இந்தியாவை பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். பல்வேறு நாடுகள் உடனான இந்தியாவின் வரியில்லா வர்த்தக ஒப்பந்தங்களால், கூடுதல் ஒத்துழைப்பிற்கான புதிய கதவுகள் திறந்து இருப்பதால், இந்திய வர்த்தக நிறுவனங்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். இந்தியா தற்போது, 1 டிரில்லியன் டாலர் என்ற ஏற்றுமதிக் குறிக்கோளுடன் செயல்பட்டு வருவதையும், அவர் தமது உரையில் சுட்டிக் காட்டினார்.

***வீட்டு வசதி***

ஸ்வச் பாரத் இயக்கம், வெறும் தூய்மை இயக்கம் என்பதற்கு அப்பாற்பட்டு, நீடித்த, நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய, எதிர்காலத்திற்கு ஏற்ற நகர்ப்புற இந்தியாவை உருவாக்கும் இயக்கமாகவே மேம்பட்டுள்ளதாக, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார். 2ஆம் கட்ட நகர்ப்புற ஸ்வச் பாரத் இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து, தேசிய அளவிலான 2 நாள் மறு ஆய்வுக் கூட்டத்தை, இன்று புதுடெல்லியில், அவர் தொடக்கி வைத்தார். ஸ்வச் பாரத் இயக்கத்தின் அமலாக்கத்தில் உள்ள சவால்களை, அனுபவ பகிர்வு மூலம் திறம்பட்ட முறையில் சமாளிப்பது குறித்தும், சம்பந்தப்பட்ட பல்வேறு அமைச்சகங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவது குறித்தும், அர்த்தமுள்ள விவாதங்கள் இக்கூட்டத்தில் இடம் பெறும் என அவர் கூறினார்.

***ராணுவ தளபதி***

உலக நாடுகளின் ராணுவச் செலவுகள், நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான ஐ.நா பட்ஜெட்டையும் தாண்டி

அதிகரித்துள்ள நிலையில், இந்தியா உலகச் சூழலை தனக்கு சாதகமாக மாற்றிக்கொள்ள, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில், தனக்குள்ள **தேசிய வலுவை** நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என, தலைமை ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், **பாதுகாப்பு மூலம் வளர்ச்சி** என்னும் பயிலரங்கில் அவர் பேசுகையில், செமிகண்டக்டர் போன்ற நவீன தொழில்நுட்பங்களும், குறிப்பிட்ட தரப்பினருக்கு மட்டுமே இத்தொழில்நுட்பங்கள் கிடைக்கும் நிலையும் புதிய ஆயுதங்களாகவே மாறி இருப்பதாக கூறினார். இதை சமாளிக்கத் தேவையான திறன் இந்தியாவிற்கு இருப்பதையே, **ஆபரேஷன் சிந்தூர்** ராணுவ நடவடிக்கை உலகிற்கு வெளிப்படுத்தி இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

***ரயில்வே***

<u>தமிழகத்தில்</u> சென்னை புறநகர் பகுதிக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் வகையில், அரக்கோணம் – செங்கல்பட்டு ரயில் பாதையை , 993 கோடி ரூபாய் செலவில், இரட்டை பாதையாக மாற்றும் திட்டத்திற்கு ரயில்வே துறை ஒப்புதல் அளித்துள்ளது. போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள ஹவுரா – டெல்லி ரயில் பாதைப் பிரிவில், கியூல் – ஜஜ்ஜா ரயில் நிலையங்களுக்கு இடையே, 962 கோடி ரூபாய் செலவில், 3ஆவது ரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கும், ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. ஜம்மு – காஷ்மீரில், புகழ் பெற்ற வைஷ்ணோ தேவி கோவிலுக்கான ஜம்மு – கத்ரா ரயில் பாதையில், சரிவான பகுதிகளை வலுப்படுத்தி, குகைகளை புனரமைக்கும் பணிகளை, 238 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளும் உத்தேசத்திற்கும், ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. சவாலான நிலப் பகுதிகளுக்கும் நம்பகமான போக்குவரத்து இணைப்புகளை வழங்குவதில், அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் இம்முடிவு அமைந்து இருப்பதாக, ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

***எடப்பாடி***

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிச்சாமி, தமிழக சட்டமன்றத் தேர்தலில், அஇஅதிமுக சார்பில் வெற்றி பெற்ற எம்எல்ஏக்களுடன் இன்று சென்னையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். திரு. எடப்பாடி பழனிச்சாமி

தலைமையிலான, அஇஅதிமுக செயலர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். முன்னாள் முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமியின், தொடர்ச்சியான பிரச்சாரம் காரணமாகவே அஇஅதிமுக சொந்தமாக 47 தொகுதிகளிலும், கூட்டணி கட்சிகளுடன் இணைந்து 6 தொகுதிகளிலும் வெற்றி பெற முடிந்து இருப்பதாக, பின்னர் அஇஅதிமுக தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே திரு. எஸ்.பி. வேலுமணி, திரு. சி.வி சண்முகம் ஆகியோர் தலைமையிலான மற்றொரு அஇஅதிமுக அணியின் கூட்டம் வேறு ஒரு இடத்தில் நடைபெற்றது.

***ரங்கசாமி ராஜினாமா***

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில், தட்டாஞ்சாவடி, மங்கலம் ஆகிய இரண்டு தொகுதிகளில் என்ஆர்காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முதலமைச்சர் திரு. ரங்கசாமி, தட்டாஞ்சாவடி தொகுதியில் இருந்து ராஜினாமா செய்து, சட்டப்பேரவைத் தலைவரிடம் சமர்ப்பித்த கடிதத்தை, தற்காலிக சபாநாயகர் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, தட்டாஞ்சாவடி தொகுதி காலியானதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இதற்கான அறிவிக்கை, புதுச்சேரி அரசிதழில் இன்று வெளியிடப் பட்டுள்ளது.

***தெரு நாய் -1***

வெறி நோயில் இருந்து குணப்படுத்த முடியாத நிலையில் உள்ள, அல்லது மிகவும் அபாயகரமான தெருநாய்கள் அதிகமுள்ள இடங்களில், நகராட்சி அமைப்புகள், மனித உயிர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, இத்தகைய நாய்களை கருணைக் கொலை செய்யலாம் என, உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்…

***தெரு நாய் - 2***

<u>டெல்லி உள்ளிட்ட இடங்களில் தெருநாய்க்கடி அதிகரித்து விட்டதாக, கடந்த ஆண்டு ஊடகங்களில் வெளியான செய்திகளைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் தானாகவே முன்வந்து, மேற்கொண்ட வழக்கு விசாரணையில், தெரு நாய்களை கருணைக் கொலை செய்வதற்கான உத்தரவு, முதல் முறையாக வெளியாகி உள்ளது. பொது இடங்களிலிருந்து பிடிக்கப்படும் தெரு நாய்களை, தடுப்பூசி அல்லது</u>

கருத்தடைக்குப் பின்னரும், மீண்டும் விடுவிக்கக் கூடாது என்ற உத்தரவை திருத்தக் கோரிய மனுக்களை இன்று உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் விலங்களுக்கான கருத்தடை மையங்களை அமைக்கவும், வெறிநாய்க்கடி தடுப்பூசிகள் கிடைப்பதை உறுதிப்படுத்தவும், நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

***வானிலை***

வளிமண்டல சுழற்சி மற்றும் காற்றழுத்த தாழ்வுப் பாதைகள் காரணமாக, இன்று, கோவை- திருப்பூர் மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் குமரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வடக்கு உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கும், தமிழகத்தின் இதரப் பகுதிகள் மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்பிருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 25ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

***ஐபிஎல்***

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, ஜெய்ப்பூரில் நடைபெறும் போட்டியில், ராஜஸ்தான் – லக்னோ அணிகள் மோத உள்ளன. லீக் போட்டிகள் நிறைவு கட்டத்தை எட்டி வரும் நிலையில், ராஜஸ்தான் உள்ளிட்ட 5 அணிகள், எஞ்சியுள்ள ஒரே ஒரு **ப்ளே ஆஃப் இடத்திற்கு** கடினமாக முயன்று வருவதும் குறிப்பிடத் தக்கது.

***யானை***

உத்ராகண்ட் மாநிலத்தில், ஜிம் கார்பெட் தேசிய வனவிலங்கு பூங்காவிற்கு உட்பட்ட கர்ஜியா மண்டலத்தில், காட்டு யானை ஒன்று, ஆரோக்கியமான இரட்டை கன்றுகளை ஈன்று இருப்பதாக, மத்திய சுற்றுச்சுழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார். காட்டு யானைகள் இரட்டை கன்றுகளை ஈனுவது, உலக அளவில் மிகவும் அபூர்வமானது என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். வனவிலங்குகளின் வாழ்விடங்களை பாதுகாப்பது, எதிர்கால தலைமுறையினருக்கு எவ்வளவு முக்கியம் என்பதையே இந்த அதிசயம் நினைவூட்டுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

***இரங்கல்***

முன்னாள் உத்ராகண்ட முதலமைச்சர் மேஜர் ஜெனரல் B.C . கந்தூரி மறைவு குறித்து, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். மேஜர் ஜெனரல் B.C. கந்தூரி, சிறப்பான ராணுவ சேவைக்குப் பின்னர், பொதுவாழ்விலும் நேர்மை, எளிமை, வெளிப்படைத் தன்மை மற்றும் வளர்ச்சி நோக்கிலான அரசியலுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர் என்று, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார். ராணுவம் – அரசியல் இரண்டிலும் அளப்பரிய பங்களிப்புச் செய்தவராக, புவன் சந்திர கந்தூரி எப்போதும் நினைவில் கொள்ளப்படுவார் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, நார்வே தலைநகர் ஓஸ்லோவில், 3ஆவது இந்தோ – நார்டிக் உச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ளார்.

வர்த்தகம் புரிவதை எளிதாக்கி முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்த தொழில்துறையினர், அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என, மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியள்ளார்.

அரக்கோணம் – செங்கல்பட்டு ரயில் பாதையை, இரட்டை பாதையாக மாற்றும் திட்டத்திற்கு, ரயில்வே துறை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி வெற்றி பெற்ற 2 தொகுதிகளில் ஒன்றான தட்டாஞ்சாவடி தொகுதியில் இருந்து, அவர் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, அத்தொகுதி காலியாகி உள்ளது.